எனது இல. 02/SD/2/08
பாடசாலை செயற்பாட்டுக் கிளை
கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாய”
பத்தரமுல்ல.
13.09.1995

எல்லா மாகாணப் பணிப்பாளர்களுக்கும்,

**பொது நிகழ்ச்சிகளில் பாடசாலை மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்வதும் பாடசாலை பேண்ட் வாத்தியப் பாவனையும்**

நான் ஏற்கனவே இது தொடர்பில் வெளியிட்ட 133/77ம் இலக்க 12.08.1977ம் திகதியிடப்பட்ட 2/SECA/3/18ம் இலக்க 15.08.1984ம் திகதியிடப்பட்ட 10ம் இலக்க 30.12.1985ம் திகதியிடப்பட்ட சுற்று நிருபங்களின்பால் உங்கள் கவனத்தினை ஈர்க்க விரும்புகிறேன்.

மேற்குறிப்பிட்ட சுற்று நிருபங்களில் நான் மாணவர்களைப் பொது வைபவங்களில் கலந்து கொள்ளச் செய்வதும் பேண்ட் வாத்தியக் கருவிகளைப் பாவிப்பது தொடர்பாக பின்வரும் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளேன்.

இந்த சுற்று நிருபங்கள் பாடசாலை எல்லைக்கு வெளியே பாதை மருங்குகளில் மாணவர்கள் மரியாதை அணிவகுப்புகளிலும், அதிதிகளை வரவேற்கும் பொருட்டும் நிறுத்தி வைப்பதனையும், பாடசாலைக்கு வெளியே பேண்டு வாத்தியங்கள் பாவிக்கப்படுவதையும் தடுக்கின்றன. பாடசாலை வாத்திய கருவிகள் பாவனையும் பொது வைபவங்களில் மாணவர்களை கலந்து கொள்ளச் செய்வதும் பின்வரும் சந்தர்ப்பங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

i) சொந்த, பாடசாலையில் இடம்பெறும் விழாக்கள்

ii) மத்திய அல்லது மாகாண கல்வி அமைச்சுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி விழாக்கள் உதாரணமாக:

அ. தேசிய/மாகாண விளையாட்டுப் போட்டிகள்

ஆ. கல்வி அமைச்சு/கல்வித் திணைக்களம்/கலாச்சார அமைச்சு என்பவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலாச்சார நிகழ்ச்சிகள்.

இ. கல்வித் திணைக்களம்/கல்வி அமைச்சுடன் இணைந்து மாவட்ட செயலகங்களால் ஏற்பாடு செய்யப்படும் சுதந்திர தின விழாக்கள்

ஈ. மத்திய கல்வி அமைச்சு/மாகாணக் கல்வி அமைச்சு / அரச திணைக்களங்கள் / கூட்டுத் தாபனங்கள் என்பவற்றால் ஒழுங்கு செய்யப்பட்டு மேன்மைதகு ஜனாதிபதி அல்லது கௌரவ பிரதம மந்திரி வருகை தரும் விழாக்கள்.

உ) வெளிநாட்டுத் தலைவர்கள் வருகை தரும் விழாக்கள்

எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட சுற்று நிருபத்தின் நிபந்தனைகளை மீறி மாணவர்களும் பாடசாலை வாத்தியக் குழுவும் பல்வேறு விழாக்களில்/வரவேற்பு/நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளச் செய்யப்படுவதாக கௌரவ கல்வி அமைச்சருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இச்சுற்று நிருபத்தின் பிரமாணங்களை கடினமாக நடைமுறைப்படுத்துமாறு அதிபர்களுக்கு பணிக்குமாறு நீங்கள் பணிக்கப்படுகின்றீர்கள். இந்த சுற்றுநிருபத்தின் நிபந்தனைகள் கல்வி அமைச்சினால் நேரடியாக நிர்வகிக்கப்படும் தேசிய பாடசாலைகளுக்கு மட்டுமன்றி மாகாணப் பாடசாலைகளுக்கும் பிரயோகிக்கப்படல் வேண்டும் என்பதை நான் அழுத்த விரும்புகின்றேன். எந்த நிலைமைகளின் கீழும் இந்த சுற்று நிருபத்தின் நிபந்தனைகள் மீறப்படலாகாது என்பதை கவனத்தில் கொள்க.

**பி.ஜி.தயாரத்ன**
**மேலதிகச் செயலாளர் (கல்வி அபிவிருத்தி)**

**எம்.டி.டி.பீரிஸ்**
**செயலாளர்**
**கல்வி உயர் கல்வி அமைச்சு**